**ஜனவரி – 17**

# TNPSC துளிகள்

- தமிழ்நாடு முதல்வர் சென்னை தீவுத்திடலில் 45-வது சுற்றுலா மற்றும் தொழிற்துறை கண்காட்சியைத் துவக்கி வைத்தார். இது தமிழ்நாடு சுற்றுலாத் துறையால் நடத்தப்படுகிறது.
- சென்னை பறவைப் பந்தயத்தின் 12-வது பதிப்பு தமிழ்நாட்டின் சென்னையில் ஜனவரி 26-ம் தேதி அன்று நடைபெறும்.
- உலகளாவிய வெப்பக் காற்று பலூன் திருவிழாவின் 5-வது பதிப்பான 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு சர்வதேச பலூன் திருவிழாவானது தமிழ்நாட்டின் சுற்றுலாத் துறையின் உதவியுடன் குளோபல் மீடியா பாக்ஸ் மற்றும் thisispollachi.com ஆகியவற்றால் இணைந்து நடத்தப்பட்டது.
    - முதல் கட்டமாக இது ஜனவரி 04 முதல் 06 வரை சென்னைக்கு அருகில் இருக்கும் செங்கல்பட்டில் உள்ள மகிந்திரா உலக நகரத்தில் நடத்தப்பட்டது. அதனையடுத்த கட்டத்தில் இது ஜனவரி 10 முதல் 16 வரை பொள்ளாச்சியில் நடத்தப்பட்டது. சென்னை தனது முதலாவது வெப்ப பலூன் திருவிழாவை கண்டுகளித்தது.
- புதுச்சேரி முதல்வர் V. நாராயணசாமி 2019 ஆம் ஆண்டு மார்ச் 01-ம் தேதி முதல் புதுச்சேரி ஒன்றியப் பிரதேசத்தில் ஒற்றைப் பயன்பாட்டு நெகிழிப் பொருட்களின் உற்பத்தி, விற்பனை மற்றும் பயன்பாடு ஆகியவை தடை செய்யப்படுவதாக அறிவித்துள்ளார்.
- முதல்முறையாக இந்திய விமானப்படையில் AN-32 என்ற போக்குவரத்து விமானம் நாட்டில் உள்ளஉயரமான ஒரு விமானத் தளமான, கடல் மட்டத்தில் இருந்து 4500 அடி உயரத்தில் அமைந்திருக்கும் சிக்கிமின் பாக்யாங்க் என்னுமிடத்தில் வெற்றிகரமான தரையிறக்கத்தை மேற்கொண்டது.
- உச்சநீதிமன்றத்தில் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் பதவிக்கு மூத்த வழக்கறிஞர்கள் K.M. நடராஜ் மற்றும் சஞ்சய் ஜெயின் ஆகியோர் நியிமக்கப்பட்டு இருக்கின்றனர். இருவரும் 2020-ம் ஆண்டு ஜீன் 30-ம் தேதி வரை இப்பதவியில் இருப்பர்.
- ஆந்திரப் பிரதேச மாநில அரசு தனது மாநிலத்தின் வளர்ச்சிக்கான முக்கியத்துவம் என்ற நோக்கில் விசாகப்பட்டினம் – சென்னை தொழிற்சாலை பெருவழிப் பாதை (Visakhapatnam-Chennai Industrial Corridor - VCIC) திட்டப்பகுதி ஒன்றின் கீழ் 1960 கோடி ரூபாய்கள் மதிப்பிற்கு சாலைத் தொடர்பு மற்றும் உபயோகம் போன்ற உள்கட்டமைப்புப் பணிகளை மேற்கொண்டு இருக்கின்றது.
- இந்திய தேர்தல் ஆணையம் கோபால கிருஷ்ண திவேதி என்பவரை ஆந்திரப் பிரதேசத்தின் தலைமை தேர்தல் அதிகாரியாக நியமித்திருக்கின்றது.
    - இவர் R.P. சிசோடியா என்பவருக்குப் பதிலாக நியமிக்கப்படுவார்.
- மத்திய வர்த்தக மற்றும் தொழிற்துறை அமைச்சர் சுரேஷ் பிரபு மும்பையில் உள்ள பம்பாய் கண்காட்சி மையத்தில் மூன்று நாள் திருவிழாவான 2019-ம் ஆண்டின் 10-வது இந்தியா ரப்பர் கண்காட்சியை துவக்கி வைத்தார்.
    - இந்த ரப்பர் கண்காட்சி ஆசியாவின் மிகப்பெரிய ரப்பர் கண்காட்சியாகும்.
- குடியிருப்புப் பகுதிகளில் விதிகளுக்கு உட்படாமல் திறந்தவெளியில் எரித்தல்,

குப்பைகளைக் கொட்டுதல், சட்டவிரோதமாக நெகிழிப் பொருள் தொழிற்சாலையை நடத்துதல் ஆகிய செயல்களைப் புரிந்தமைக்காக மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியமானது (Central Pollution Control Board - CPCB) கிழக்கு டெல்லி மாநகராட்சிக் கழகம், தெற்கு டெல்லி மாநகராட்சிக் கழகம் மற்றும் வடக்கு டெல்லி மாநகராட்சிக் கழகம் ஆகிய மூன்று மாநகராட்சி அமைப்புகளுக்கும் 1 கோடி ரூபாய் அபராதம் விதித்து இருக்கின்றது.

- தெலுங்கானாவின் ஹைதராபாத்தில் உள்ள GMC பாலயோகி விளையாட்டு மையத்தில் ஏகலைவா மாதிரி உறைவிடப் பள்ளி மாணவர்களுக்காக 3 நாட்கள் நடைபெறும் முதலாவது தேசிய அளவிலான விளையாட்டுச் சந்திப்பு நடைபெற்றது.
- மத்திய அமைச்சரவை இந்திய ஏற்றுமதி இறக்குமதி வங்கியில் 6000 கோடி ரூபாய் முதலீட்டை உட்செலுத்துவதை அங்கீகரித்துள்ளது. இந்த மூலதன செலுத்துதல் இந்திய ஏற்றுமதிக்கும் மூலதன நிறைவு நிலையை அதிகப்படுத்துவதற்கும் உதவியாக இருக்கும்.
- சர்வதேச கிரிக்கெட் குழுமம் (International Cricket Council - ICC) தனது அமைப்பின் புதிய தலைமை செயல் அதிகாரியாக மனு சாஹ்னி என்பவரை நியமித்திருப்பதாக அறிவித்திருக்கின்றது.
- பாகிஸ்தான் கிரிக்கெட் அணித் தலைவர் சர்ப்ராஸ் அகமது ஒரு போட்டியில் அதிக எண்ணிக்கையிலான கேட்சுகளைப் பிடித்த விக்கெட் கீப்பர் கேப்டனாக உருவெடுத்து ஒரு உலக சாதனையைப் படைத்துள்ளார்.
    - இச்சாதனை ஜோகன்னஸ்பெர்க்கில் உள்ள வான்டெரர்ஸ் மைதானத்தில் தென்னாப்பிரிக்காவிற்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் விளையாடும் போது அவரால் மேற்கொள்ளப்பட்டது.

# தேசியச் செய்திகள்

## தேசிய ஆகாய சரக்குப் போக்குவரத்துக் கொள்கை

- அரசு தனது தேசிய ஆகாய சரக்குப் போக்குவரத்துக் கொள்கையை அறிவித்திருக்கின்றது. இதில் அரசின் முக்கிய நோக்கம் என்பது 2025-ம் ஆண்டிற்குள் உலகின் முன்னணி ஐந்து ஆகாய சரக்குப் போக்குவரத்து சந்தையில் இந்தியாவை ஒரு நாடாக்க முனைவதாகும்.
- இந்தக் கொள்கை ஆவணம் மும்பையில் நடைபெற்ற இரண்டு நாள் உலகளாவிய விமானப் போக்குவரத்து மாநாட்டில் வெளியிடப்பட்டது.
- இந்த கொள்கை விமானப் போக்குவரத்துத் துறையில் வளர்ச்சியை ஊக்குவித்து நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும்.

## 9-வது சர்வதேச சிறு பாசன மாநாடு

- மகாராஷ்டிராவின் ஔரங்காபாத் நகரில் மத்திய நீர்வள ஆதாரங்கள் மற்றும் நதி மேம்பாட்டு அமைச்சகமானது 9-வது சர்வதேச சிறு பாசன மாநாட்டை நடத்தியிருக்கின்றது.
- இம்மாநாடு புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதில் கிடைக்கும்

அனுபவங்களையும் சொட்டுநீர், தெளிப்பு மற்றும் இதர உள்ளூர் பாசன முறைகளில் உள்ள சிறந்த மேலாண்மை முறைகளையும் பகிர்ந்திட எண்ணுகின்றது.


- இந்த மாநாடு "சிறு பாசனம் மற்றும் நவீன விவசாயம்" என்ற கருத்துருவின் மீது கவனம் செலுத்தியது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## டைட்டன் மீதான மீத்தேன் மழைப் பொழிவிற்கான ஆதாரம்


- விஞ்ஞானிகள் காசினி விண்கலத்திலிருந்து கிடைக்கப் பெற்ற தகவல்களைப் பயன்படுத்தி சனிக் கிரகத்தின் மிகப்பெரிய நிலவான டைட்டனின் வடக்கு துருவ முனையில் மீத்தேன் மழைப் பொழிவிற்கான ஆதாரங்களைக் கண்டறிந்திருக்கின்றனர்.
- இந்த மழைப்பொழிவானது டைட்டன் கிரகத்தின் வடக்கு துருவத்தில் கோடைக் காலத்தின் ஆரம்பத்தைக் குறிக்கும் முதல் ஆதாரமாக இருக்கும்.
- அந்நிலவின் வடக்கு துருவத்தின் மீதான கோடைக்கால மழைப்பொழிவின் முதல் கண்டுபிடிப்புகளைப் பிரதிபலிக்கும் நிலப்பரப்பு அடையாளம் காட்டுகின்றது.
- பூமியின் வருடாந்திர சுழற்சியான நான்கு பருவங்களோடு ஒப்பிடும்போது டைட்டனில் ஒரு பருவம் 7 புவி ஆண்டுகளுக்கு நீடிக்கின்றது.
- காசினி திட்டம் என்பது நாசா, ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் மற்றும் இத்தாலிய விண்வெளி நிறுவனம் ஆகியவற்றின் கூட்டுத் திட்டமாகும். இது 1997 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் செலுத்தப்பட்டது.
- இந்த விண்கலத்தின் நோக்கம் சனிக் கிரகத்தைப் பற்றியும் அதன் அமைப்பு, அதன் வளையங்கள் மற்றும் அதன் இயற்கையான துணைக் கோள்கள் பற்றியும் ஆய்வு செய்வதாகும்.




## பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

### ஜப்பான் பரிசு

- ஜப்பான் பரிசு நிறுவனம் "உயிரியல் உற்பத்தி மற்றும் சுற்றுச்சூழலியல்" துறையில் 2019 ஆம் ஆண்டின் ஜப்பான் பரிசிற்கான நபராக இந்தியாவைப் பூர்வீகமாக கொண்டவரான பேராசிரியர் டாக்டர் ரத்தன் லால் என்பவரை அறிவித்திருக்கின்றது.
- 2019 ஆம் ஆண்டிற்கான "மூலப்பொருட்கள் மற்றும் உற்பத்தி" என்ற துறையில் ஜப்பான் பரிசினைப் பெறுபவராக டாக்டர் யோஷியோ ஒகாமோடோ என்பவர் அறிவிக்கப்பட்டுள்ளார்.
- ஒவ்வொரு விருதாளரும் அங்கீகரிப்புச் சான்றிதழையும், நினைவுப் பரிசாக ஒரு தங்கப் பதக்கத்தையும் பெறுவர்.




### *ஜப்பான் பரிசு பற்றி*

- இந்தப் பரிசு ஒவ்வொரு வருடமும் ஜப்பான் பரிசு நிறுவனத்தால் உலகம் முழுவதும் இருந்து அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறையின் மேம்பாட்டிற்காக குறிப்பிடத்தக்கப் பங்களிப்புகளை ஏற்படுத்தி அதன் மூலம் மனித இனத்திற்கு செழுமையையும் அமைதியையும் ஏற்படுத்திய அறிவியலாளர்கள் மற்றும் பொறியியலாளர்களுக்கு வழங்கப்படுகின்றது.
- 1985-ம் ஆண்டு தொடங்கப் பட்டதிலிருந்து இந்நிறுவனம் 13 நாடுகளைச் சேர்ந்த 81 நபர்களுக்கு இவ்விருதினை வழங்கியிருக்கின்றது.
- 2020 ஆம் ஆண்டின் ஜப்பான் பரிசு "மின்னணுவியல், தகவல் தொடர்பு மற்றும் உயிர் அறிவியல்" ஆகிய துறைகளின் மீது கவனம் செலுத்தும்.

---------------